சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 29.07.2025 SC.17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.10 | | | |

---

முதல் விசாரணை

நான் கம்பம் பாரதியார் நகரில் 5வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என் தம்பி கண்ணனுடன் நான் கொத்தனார் வேலைக்கு சென்றேன். சுப்பிரமணியன் கோவில் தெருவில் தங்கராஜ் என்பவர் வீட்டில் வேலை பார்த்தேன். கடந்த 04.05.2020ம் தேதி 2.15 மணிக்கு வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு புறப்பட்டுக் கொண்டு இருந்தோம். அப்போது சத்தம் கேட்டது. இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசுதரப்புக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் பிறழ் சாட்சியாக மாற்றப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசுதரப்பு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.)

கடந்த 04.05.2020ம் தேதி சுமார் 2.30 மணிக்கு தங்கராசு வீட்டு அருகில் சென்று கொண்டிருந்தபோது அப்போது மாயான்டியும் அவரது அண்ணன் பொன்னையா கடப்பாரையுடனும் மாயான்டி மகன் சௌந்தர் ஆகியோர் தங்கராசு வீட்டருகில் வந்து, தங்கராசை பார்த்து என் இடத்தில் எப்படி டா வீடு கட்டலாம் என்று மாயான்டியும் சௌந்தர் என்பவரும் அநாகரிகமாக பேசினார்கள், பொன்னையா அவர் கொண்டு வந்த கடப்பாரையால் கட்டிடத்தின் கான்கீரிட பகுதியை இடித்தார். இதை தங்கராசும் அவரது மகன் கல்யானகுமார் என்பவரும்

தடுத்ததற்கு அவர்கள் இருவரையும் மாயான்டி சௌந்தர் மற்றும் பொன்னையா ஆகியோர் கையால் மாறி மாறி அடித்து காலால் உதைத்தார்கள். உடனே மாயான்டி அவரது அண்ணன் பொன்னையா மாயான்டி மகன் சௌந்தர் ஆகியோர்கள் என்னடா அப்பனும் மகனும் தவ்விகிட்டு வருகிறீர்கள் என்று சொல்லி தள்ளுமுள்ளு செய்யும்போது தங்கராசை மாயான்டி தன் இடுப்பில் வைத்திருந்த கத்தியால் நீ உயிருடன் இருந்தால்தானடா வீடுகட்டுவ இத்துடன் செத்து போடா என்று செல்லி தங்கராசு வயிற்றில் குத்தினார் என்றும், அங்கிருந்த நாங்களும் தங்கராசு குடும்பத்தாரும் சத்தம் போடவும், எதிரிகள் ஆயுதங்களுடன் ஓடிவிட்டார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.